Agricultural Schools.

*130 *Q.*—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) whether it is a fact that the Government are proposing to establish a net-work of Agricultural Schools in Thanjavur district ; and

(*b*) if so, the nature of the scheme?

வேளாண்மைப் பள்ளிகள்.

திரு. எ. ஆர். தாமோதரன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில், ஆங்காங்கே வேளாண்மைப் பள்ளிகள் நிறுவ அரசு திட்டமிட்டுள்ளது என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அத்திட்டத்தின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Aerial Spraying.

*131. *Q.*—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(*a*) the acreage in which aerial spraying was carried out during 1970–71 in North Arcot District ; and

(*b*) the amount collected per acre from the agriculturists for this aerial spraying?

விமானம் மூலம் பூச்சி மருந்து தெளித்தல்.

திரு எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) 1970–71ம் ஆண்டு வடஆற்காடு மாவட்டத்தில் விமானம் மூலம் பூச்சி மருந்து எவ்வளவு ஏக்கர் நிலத்தில் தெளிக்கப்பட்டது ?

1972 டிசம்பர் 15]

(இ) தெளிக்கப்பட்ட மருந்துக்காக ஏக்கருக்கு எவ்வளவு தொகை விவசாயிகளிடம் வசூலிக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : (அ) 1970–71ம் ஆண்டு விமானம் மூலம் நெல், நிலக்கடலை ஆகிய பயிருக்கு பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது. தெளிக்கப்பட்ட ஏக்கர் விவரம் :

விவசாயப் பிரிவு.	மருந்து தெளிக்கப்பட்ட பயிர்களின் விபரம். (லட்சம் ஏக்கரில்)		
	நெல்.	நிலக்கடலை.	மொத்தம்.
வேலூர்	0.101	0.302	0·403
ராணிப்பேட்டை	0.275	0.020	0.295
செய்யார்	0.386	0.073	0.459
திருவண்ணாமலை	0.090	..	0.090
	0.852	0.395	1·247

(இ) விவசாயிகளிடம் இருந்து வசூலிக்கும் தொகை விவசாயப் பிரிவுகளில் மாறுபட்டு இருக்கும். பொதுவாக, நிலக்கடலைப் பயிருக்கு ரூ. 7.85 முதல் 8.00 வரையிலும், நெற்பயிருக்கு ரூ. 12.25 முதல் 15.65 வரையிலும், வசூலிக்கப்படுகிறது. இந்தத் தொகையில் ரூ. 5 விமான வாடகையும், மீதமுள்ளவை பூச்சி மருந்துக்கான கிரயமும் ஆகும்.

திரு எல். பலராமன் : தலைவரவர்களே, விவசாயிகளிடமிருந்து வசூலிக்கக் கூடிய தொகை ஏக்கருக்கு மாவட்ட வாரியாக வித்தியாசம் ஆகுமாவென்று அறிய விரும்புகிறேன். மாநில அளவில் எவ்வளவு ஏக்கருக்கு மருந்து தெளிக்கப்பட்டது என்ற விவரத்தை அறிவிப்பார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஏக்கருக்கு மாவட்டந்தோறும் ஒரே வகையாக வசூலிக்கப்பட்டது. பொதுவாக இந்தத் திட்டம் 1961–62 ஆண்டு முதல் அமுல் செய்யப்பட்டு வருகிறது. 1970–71ல் 6.974 லட்சம், 1971–72ல் 9,803 லட்சம் ஏக்கர்களில் தெளிக்கப்பட்டிருக்கிறது.